**வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா கம்பனி – 2024/2025**

------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா கம்பனியின் ("கம்பனி") 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் கம்பனியால் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2025/2026 கணக்கு ஆண்டின் போது கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் பிற்போட்ட வரி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற | நிலையான சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதிகளை பெற்றுக்கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடுகளில் வேறுபாடு காணப்பட்டால் நிதிக் கூற்றுகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 11,456,522 ஆன 06 வகையான சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாடு ஆயுட்காலம் அவ்வாறு மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் பயன்பாடு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாடு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி கூற்றுகளில் உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79(ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 78,882,933 கிரயத்திலான சொத்துக்களின் மொத்த முகப்பு பெறுமதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீண்டும் பெறுமதி இடுவதற்காக கைத்தொழில் அமைச்சின் ஊடாக விலை மதிப்பீட்டு திணைத்திடமிருந்து எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் முகப்பு பெறுமதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு உரிய ரூபா 3,840,056,229 பெறுமதியான 06 ஏக்கர் காணி பகுதி ஒன்றை அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்தது அதற்காக 2022 நவம்பர் 04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த கொழும்பு மாவட்ட பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 7,229,173,000 ஆன இழப்பீடு மதிப்பீட்டுத் தொகையில் நிதி அமைச்சுக்கு வேறொரு கொடுக்கல் வாங்கல் ஒன்றாக செலுத்த வேண்டி இருந்த ரூபா 21,608,510 மீதி ஒன்று கழிக்கப்பட்டு ரூபா 7,207,564,490 | 2025 ஒக்டோபர் 03 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நியாயத்தின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இக் காணிக்காக பெறவேண்டிய இழப்பீட்டுத் தொகையான ரூபா 7,229,173,000 வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டு அக் கலந்துரையாடல் குறிப்புக்கள் முறையாக அனுப்பப்பட்டிருந்தன. அந்த இழப்பீட்டுத் தொகை வழங்குவதாக மீண்டும் கைத்தொழில் அமைச்சின் செயலாளரால் பொது | முன்னைய ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட கணக்கீட்டு தவறுகளை சரிசெய்து நிதிக்கூற்றுகளில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆன மீதி ஒன்று பெறவேண்டிய இழப்பீட்டு தொகையாகவும் சொத்துக்களில் அகற்றுதல் இலாபம் ரூபா 3,389,116,771 நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகளுக்கு செலவு வைப்பதற்காக மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடாகவும் ஒன்றாகவும் 2024 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது முன்னைய ஆண்டின் கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டிருந்த இந்த தவறு சீராக்காமையால் மீள் மதிப்பீட்டு ஒதுக்க ரூபா 3,389,116,771 கூடுதல் ஆகும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு அப்பெறுமானத்தால் குறைத்தும் தொடர்ந்தும் வேலை வாங்கி நிதிக் கூற்றுக்களை காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகை 2026 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனிக்கு கிடைக்காமல் இருந்ததுடன் அத்தொகை பெறுவதில் ஆபத்தொன்றை அவதானிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களை தேவையான வெளிப்படுத்தல் களை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | முயற்சியால் திணைக்களத்தில் இருந்து எழுத்து மூலம் பெற்றுக்கொள்வதற்காக எழுத்து மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகை பெறுவனவுக்காக நிதிக்கூற்றுகளில் பதிவு செய்யப்பட வேண்டிய வேறுபாடுகளை அடுத்த கணக்காண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றி மற்றும் பெறுகை நடைமுறை கோவையில் இருந்து விலகி கம்பனியின் உற்பத்திகளை நாடு பூராக விநியோகிக்கும் கூட்டிணைப்பு முகவராக நடவடிக்கை எடுப்பதற்கு தனியார் கம்பனி ஒன்றுடன் 2024 ஜனவரி 04 ஆந் திகதி முதல் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்காக ரூபா 3,195,539 தொகை உரிய கம்பனிக்கு விற்பனை தரகு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந் நிறுவனத்தின் கூட்டிணைப்பாளர் யார் கடந்த 10 மாதங்களில் ரூபா 90 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்றை உழைப்பதற்கு முடியுமாக இருந்தது எனினும் இந்த உடன்படிக்கை 2024 டிசம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்து இருந்தது. | சேவை உடன்படிக்கைகளுக்கு உட்படும் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 1,814,276 தொகையான வியாபார பெற வேண்டிய கடன் மீதிகளை அறவிடப்பட்டு இருக்கவில்லை | ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 1,814,276 தொகையான பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய மீதிகளை தாமதம் இன்றி அறவிட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,976,442 ஆன செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | செலுத்த வேண்டிய ரூபா 397,442 தொகையை பதிவழிப்பதற்கு நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திலும் பணிப்பாளர் சபையில் அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன் அது தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர் செயலாளர் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தாமதம் இன்றி கொடுப்பது செய்யப்பட வேண்டும் |

### 1.6.3 அமைப்பின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் ரூபா 539,148,850 கிரயமான சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் கிரயம் ரூபா 513,854,320 அதாவது மொத்த கொள்வனவுகளில் 95 சதவீதம் ஒரு வழங்குனரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. | குறித்த தரத்துடனான 12 வழங்குனர்கள் அளவில் இலங்கையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்த போதும் அதில் அதிக அளவானோர் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியாளர்களாக | மூலப்பொருள் வழங்கும் போது ஒரு வழங்குனருக்கு அதிக அளவில் ஒரு வழங்குனரிடம் சார்ந்திருப்பது தவிர்க்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதன் பிரகாரம் கம்பனியின் பிரதான சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக தேவையான மூலப்பொருட்களை வழங்கும் போது ஒரு வழங்குனரிடம் அதிக அளவில் தங்கி இருப்பதன் காரணமாக கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் தொடர்ந்து நிலைத்திருப்பதில் ஆபத்தொன்று காணப்பட்டது. | இருந்தவுடன் உள்நாட்டு சந்தைக்கு மிகவும் குறைந்த அளவிலே உள்ளனர் எனினும் தற்போது எண்ணைய் வழங்குனர்கள் இரண்டு பேர் மூலம் தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்யப்படுகின்றது |

## 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைந்நூல் | | | |
| (i) | 3.2 ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்திருக்கவில்லை. இருந்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | இந் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தினால் இதுவரை அங்கீகரித்திருக்க வில்லை. | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.2 (அ) பிரிவு | சம்பளக் கட்டமைப்புகள் மற்றும் படிகள் வழங்குவதற்கான கோரிக்கைகள், பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சின் பரிந்துரைகளுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய அங்கீகாரம் ஒன்று இல்லாமல், மீளாய்வாண்டில், | நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களை கைதவிர்க்க, போதுமான சாரதிகள் இல்லாதிருத்தல், குழுப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது வெவ்வேறு பகுதிகளில் குடியிருத்தல், வேலை நேர மாற்றங்கள் போன்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் பொதுப் போக்குவரத்து | சம்பளக் கட்டமைப்புகள் மற்றும் படிகள் வழங்குவதற்கா ன கோரிக்கைகள், பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தி |

| | | | |
|---|---|---|---|
| | குழுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தாத 3 சிரேஷ்ட நிலை அதிகாரிகளுக்கு ரூபா 801,000 போக்குவரத்துப் படியும், 48 ஊழியர்களுக்கு ரூபா. 4,071,375 வருகைப் படியும், 03 ஊழியர்களுக்கு ரூபா . 108,000 இடர் படியும் வழங்கப்பட்டடிருந்தன. | தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி, எரிபொருள், மேலதிக நேரப் பணி மற்றும் வாகனப் பராமரிப்புச் செலவுகளைக் குறைப்பதற்கும், மேலும் இந்த உத்தியோகத்தர்களுக்கு வெளி அலுவலகப் போக்குவரத்து வசதி சேவையின் மூலம் நிறுவனத்திற்கு வருவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கும், இந்தப் போக்குவரத்து வசதியை மிகவும் சிக்கனமான முறையில் வழங்குவதற்காக இந்தக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | ன் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| | (ஆ) PL-1 சேவைப் பிரிவில் இருந்த 04 ஊழியர்கள் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல், PL-2 மற்றும் PL-3 சேவைப் பிரிவுகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு 2024, ஜூலை முதல் 2025 மார்ச் வரை அடிப்படைச் சம்பளமாக மொத்தம் ரூபா. 965,340 வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் மறுசீரமைப்பை இரத்து செய்வது குறித்த அமைச்சரவையின் முடிவைக் கோரி வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்காகத் கைத்தொழில்துறை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரம் கிடைத்ததைத் தொடர்ந்து, பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் ஊதியக் கொடுப்பனவுகள் தொடர்பான தேவையான அங்கீகாரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை நான் மேற்கொள்வேன். | சேவைப் பிரிவுகளுக்கு இடையே பதவி உயர்வு வழங்கப்படும் போது பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2025 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் | நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நியமனம் தொடர்பாக | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 07 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆண்டறிக்கையின் வரைவொன்று அதனுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | காணப்பட்ட சிக்கல்கள் மாற்றத்தின் காரணமாக நிதிக் கூற்றுக்களை குறிப்பிட்ட கால எல்லைகள் அங்கீகரித்துக் கொள்ள முடியாமல் இருந்ததுடன் 2025 திசெம்பர் 17 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 103,333,611 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 155,729,211 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 52,395,600 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சுத்திகரிப்பு வருமானம் ரூபா 143,601,272 ஆல் அதிகரித்தும் விநியோகித்தல் செலவினம் ரூபா 9,912,117 இனால் குறைவடைந்திருந்த போதிலும் சவர்க்கார விற்பனை வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 66,361,779 ஆலும் ரூபா 15,391,051 ஆலும் குறைவடைந்தமை உட்பட விற்பனை கிரயம் ரூபா 116,303,013 ஆலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கம்பனிக்கிடையே ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் உடன்படிக்கையின் பிரகாரம் 1988 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்த வாடகை செலுத்தி வந்த குணசிங்கபுர டயஸ் பிரதேச வீடொன்று 1998 ஆம் ஆண்டிலிருந்து அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் வசித்து வந்த போதிலும் அந்த குடியிருப்பாளர்களை அகற்றி வீட்டின் உரித்தைக் கையேற் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேற்கோள்வதற்கு நேர்ந்ததுடன் அது நீண்டகால செயற்பாடு ஒன்றாக இருப்பதால் தற்பொழுது வாடகை கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் விசாரித்து இச்சிக்கலை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றுவதற்கு விட அமைப்பு அதிகார சபை உடன் தொடர்பு கொண்டு இச்சிக்கலை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதியற்ற குடியிருப்பாளரை அகற்றுவதற்கு வீடமைப்பு அதிகாரசபையுடன் தொடர்புபட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வீட்டின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியால் 28 வளவுகளை களஞ்சியங்கள் மற்றும் அலுவலகங்கள் பராமரித்து செல்வதற்காக வெளித் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கி இருந்ததுடன் அதில் 20 வளவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெளிவு பரிசோதனையின் போது 2017 ஆம் ஆண்டின் பின்னர் குறித்த வளவுகளுக்காக சந்தை மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வாடகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஏப்ரல் மாதம் முதல் ஒரு சதுர அடி களஞ்சியத்திற்காக ரூபா 80 வீதம் ஒரு சதுர அடி அலுவலக வசதிகளுக்காக ரூபா 100 உமாக விலை அதிகரிக்கப்பட்டதுடன் 2025 செப்டம்பர் மாதம் முதல் ஒரு சதுர அடி களஞ்சியத்திற்காக ரூபா 100 உம் ஒரு சதுர அடி அலுவலக வசதிக்காக ரூபாய் 120 என மீண்டும் விலை அதிகரிக்கப்பட்டது. 2026 பெப்ரவரி மாதம் இரண்டாம் நாள் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக கைத்தொழில் அமைச்சின் மூலம் மதிப்பீட்டு திணைக்களத்துக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வளவுகளுக்காக சந்தை மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு வாடகைக்கு உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேங்காய் எண்ணையை உள்ளடக்கிய 09 உற்பத்திகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்ட போதும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி தவிர எந்தவொரு உற்பத்திக்காகவும் இலங்கை தரச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தரச் சான்றிதழை பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டுக்காக உற்பத்தி பிரிவில் நவீனப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது இலங்கை தர நிறுவன உத்தியோகத்தர்கள் தொழிற்சாலைக்கு வருகை தந்து ஆரம்ப அவதானிப்புகளை மேற்கொண்டிருந்தனர் | அனைத்து உற்பத்திகளுக்காக வும் இலங்கை தர சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த வத்துபிட்டிவெல ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தில் அமைந்துள்ள காணி ஒன்றின் சட்ட ரீதியான உரிமை கையளிக்குமாறு கம்பனியால் இலங்கை முதலீட்டு சபையிடம் கோரியிருந்ததுடன் கம்பனின் பிரதான | கடந்த காலங்களில் நிறுவனத்தினை மீளமைப்பதற்கு இனங்கானப்பட்ட நிறுவனம் ஒன்றாக நிதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்தமை காரணமாக நாளாந்த செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன் பேரில் இது தொடர்பாக எந்த கவனத்தையும் அமைச்சின் மட்டத்தில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் | கம்பனியின் சொத்துக்களை வருமானத்தை உழைப்புக்காக செயற்திறனாக ஈடுபடுத்தப்பட வேண்டும் |

அலுவலகத்தில் காணப்பட்ட சவர்க்கார உற்பத்தி இயந்திரசாலை 2012 ஆம் ஆண்டின் போது இந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணி கையேற்பிற்காக குத்தகை தவணை (Lease Premium) மற்றும் நில வாடகையாக (Ground Rent) ஒரு ஏக்கருக்காக ஓராண்டுக்கு 5,130 அமெரிக்க டொலர் செலுத்த வேண்டும் எனவும் காணி கையேற்பிற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடையும் வரை ஒரு ஏக்கருக்காக மாதாந்தம் 567 அமெரிக்க டொலர் வீதம் செலுத்து மாறும் சபை கம்பனிக்கு அறிவித்திருந்தது கம்பனியின் நிதி நிலைமை சிறப்பாக இல்லாததன் பேரில் குறித்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது.டன் காணியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சவர்க்காரம் மற்றும் ஏனைய கழுவும் திரவங்கள் உற்பத்தி தொழிற்சாலை கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை விளைவற்று காணப்பட்டது இந்நிறுவனம் மீண்டும் கைத்தொழில் அமைச்சின் கீழ் வந்த பின்னர் நியமிக்கப்பட்ட புதிய பணிப்பாளர் சபையினால் உரிய கையேற்பினை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது